7/5/16 10.05.2018

**சுற்றுநிருப இலக்கம்: 09/2018**

மாவட்டத்திற்குப் பொறுப்பான சகல கமநல அபிவிருத்தி
பிரதி/உதவி ஆணையாளர்கள்.

**கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டம்**

**“ஸிதமூ” மகளிர் தொழில் முயற்சியாளர்களின் பொருட்டான கருத்திட்டக் கடன் திட்டம்.**

பெண்கள் தமது குடும்ப அலகை, பொருளாதார, சமூக, கலாச்சார, சுகாதார மற்றும் போஷாக்கு ஆகிய சகல பிரிவுகளிலும் முழு நிறைவடையும் பொருட்டு பலப்படுத்தல் மற்றும் “ஸிதமூ” மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் ஊடாக பெறுபெறான மற்றும் தொடர்ச்சியான முன்நோக்கியப் பயணப்பாதையில் கொண்டு செல்லல் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிலாஷையாகும்.

02. இம் முன்நோக்கியப் பயணப் பாதையை உறுதிப்படுத்தும் வியாபார சந்தர்ப்பங்களை இனங்கண்டு, அவதானமான முகம் கொடுத்து, நாட்டின் தேசிய உற்பத்திக்கு பெறுமதியை ஒன்று சேர்த்து, நிலவும பொருளாதார முறையில் ஏதேனும் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு ஆக்க ரீதியிலான பங்களிப்பினை வழங்கும் “ஸிதமூ” மகளிர் தொழில் முயற்சியாளர்கள் தமது, செயற்பாட்டினை உற்பத்தித் திறன்மிக்கதாகவும் மற்றும் வெற்றிகரமாகவும் எடுத்துச் செல்லும் போது, தேவையான மூலதன தேவைப்பாட்டிற்கு பங்களிப்புச் செய்யும் பொருட்டு கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டத்தின் பங்களிப்பினை வழங்குவது இச்சுற்றுநிருபத்தின் நோக்கமாகும்.

03. அதற்கமைய கமநல சேவைகள் நிலைய அதிகாரப் பிரிவுகளில் இதுவரையில் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்கள், தொழில் முயற்சியாளர்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகளின் கீழ் ரூபா 50,000.00 ஆகக் குறைந்த உச்சத்தின் கீழ் கடன் பணம் வழங்குதல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**01. கடன் முன்மொழிவுத் திட்டம்**

1.1 **புதிய தொழில் முயற்சியாளர்களின் கடன் திட்ட முறை**

மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களில் புதிய உற்பத்தி அல்லது ஏதேனும் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு விருப்பமுள்ள பெண்களின் பொருட்டு கடன் வசதிகள் வழங்குவது இதன் நோக்கமாகும்

1.2 **வியாபாரத்தை மேம்படுத்தும் பொருட்டான கடன் திட்டம்**

புதிய வியாபாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தற்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு கடன் வசதிகளை வழங்குவது நோக்கமாகும்.

1.3 **விற்பனை ஊக்குவிப்பின் பொருட்டு கடன் திட்ட முறை**

புதிய உற்பத்திகளின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டான கடனை வழங்குவது இதன்

நோக்கமாகும்.

02. **கடனைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமைகள்:**

2.1 கமநல சேவைகள் குழு/அபிவிருத்திச் சபைகளின் அதிகாரப் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல்.

2.2 கருத்திட்டத்திற்குரிய கிராம கமக்காரரர்களின் ஒழுங்கமைப்பின் உறுப்பினராகவிருத்தல்

2.3 உற்பத்திறன்மிக்க கருத்திட்டமாகவிருத்தல் (வியாபார முன்மொழிவின் மூலம் உறுதிப்படுத்தியிருத்தல்)

2.4 உரிய "ஜிதமு" மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பு, கமநல வங்கியில் பங்கு உறுப்புறுமையைப் பெற்றிருத்தல்.

2.5 கடன் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் கருத்திட்டத்தில் முழு நேரமாக ஈடுபடக் கூடிய ஆற்றல்.

2.6 கருத்திட்டத்திற்குரிய பயிற்சிகள் பெற்றிருத்தல் விசேட தகைமையாகும்.

2.7 கமநல வங்கியில் கடனைப் பெற்றுக் கொண்டிருப்பின் உரிய முறையில் செலுத்தித் தீர்த்திருத்தல்.

2.8 பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் கடன் பணத்தில் 5% பங்காகவும், 5% வைப்பாகவும் பேணுதல்.

2.9 நாளாந்த கட்டாய சேமிப்புக் கணக்கொன்றை (நாளாந்தம் ரூபா 5.00 பணத்தை) தமது அதிகாரப் பிரிவின் "ஜிதமு" மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பில் பேணுதல் கட்டாயமாகும்.

2.10 கருத்திட்டம் சமூக விரோத மற்றும் சுற்றாடல் விரோத நடவடிக்கையாகவிருத்தலாகாது.

03. **கடன் பணம் மற்றும் வட்டி வீதத்தையும் மீளச் செலுத்தும் ஆகக் கூடிய காலம்:**

3.1 ஆகக் கூடிய கடன் தொகை ரூபா 50,000.00 ஆகும்.

3.2 வருடாந்த வட்டி 9% ஆகும். (குறைந்து போகும் கொடுப்பனவு முறைக்கமைய வட்டியை கணக்கிடல் வேண்டும்.)

3.3 மீளச் செலுத்தும் முறை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

கடன் பணத்தைப் பெற்றுக் கொண்ட திகதி தொடக்கம் 03 மாத காலம் அல்லது அதற்கு குறைந்த சலுவைக் காலக்காலத்தின் பின்னர் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (வியாபாரத்தின் தன்மைக்கமைய சலுவைக் காலம் கமநல சேவைகள் குழு/கமநல அபிவிருத்திச் சபையின் மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.)

04. **கடனை அனுமதிக்கும் விதிமுறை:**

ரூபா 50,000.00 வரையில் சகல கடன் அனுமதியும் கமநல சேவைகள் குழு/கமநல அபிவிருத்திச் சபையின் கடன் உப குழுவின் மூலம் மேற்கொள்ளல் வேண்டும்.

05. **பிணை வைப்பு:**

5.1 சிறிய குழுவொன்றின் உறுப்பினர்களாயின் சிறிய குழுக் கணக்கில் எதிர்பார்க்கும் கடன் பணத்தின் 5% ஐ வைப்புப் பணமாக பேணுதல் மற்றும் உறுபினர்கள் கமநல வங்கியில் பங்குதாரராகவிருத்தல்.

5.2 சிறிய குழுவொன்றில் உறுப்பினராகவிருத்தல் தவிர்ந்த, ஏனைய சகல தகைமைகளையும் கொண்டிருப்பின், கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் அதிகாரப் பிரதேசத்தின் கமநல வங்கி உறுப்பினர்கள் இருவர் (சாதாரணக் கடன் அல்லது அதற்குக் கூடிய கடனைப் பெற்றுக் கொள்வதற்காகத் தகைமைகள் பெற்றிருப்பின்) பிணையாளியாக ஒப்பமிட்டிருத்தல்.

5.3 ஏனைய தகைமைகளைக் கொண்டிருப்பின், அரச சேவையாளர் பிணை அல்லது கமநல வங்கியின் உறுப்பினர்கள் பிணையாளிகளாக ஒப்பமிட்டருத்தல்.

**06. கடன் பணத்தை விடுவித்தல்**

6.1 கடன் விண்ணப்பதாரியினால் வழங்கப்பட வேண்டிய சகல ஆவணங்களும் கிடைக்கப் பெற்றதன் பின்னர், கடன் பணத்தை விடுவிப்பதற்கு கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6.2 கருத்திட்டத்தின் தேவைக்கேற்ப கடன் பணத்தை ஒரே தடவையில் அல்லது கட்டமாக விடுவிக்கப்படும்.

6.3 கடன் பணத்தை விடுவிக்கும் போது கமநல சேவைகள் குழு/கமநல அபிவிருத்திச் சபையின் தீர்மானத்தின் பேரில், கமநல சேவைகள் விற்பனை பிரிவின் மூலம் பொருட்களை கடனாகவும் விடுவிக்கலாம்.

07. 04/2012 என்னும் இலக்கமுடைய 29.02.2012 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைய கமநல வங்கியில் உறுப்புறுமையைப் பெற்றுக் கொண்டு, கடனுக்காக விண்ணப்பிப்பதற்கு 18 மாத காலம் செயற்பாடுடைய உறுப்பினராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை இவ்வேலைத்திட்டத்தின் பொருட்டு நீக்கப்படுகின்றது.

08. **பொதுவான விடயங்கள்:**

8.1 சகல கடன் விண்ணப்பங்களும் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் கடன் உபகுழுவின் சிபாரிசுடன் கடன் உப குழு/கமநல சேவைகள் குழுவிற்குப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

8.2 கடன் வழங்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களின், கடனாளிகளின், கமக்காரர்களின் ஒழுங்கமைப்புகளின் பெயர்ப்பட்டியலொன்றை படிவ இலக்கம் 01 ஐப் பயன்படுத்தி, மாவட்ட அலுவலகத்திற்கும், படிவம் இலக்கம் 02 ஐப் பயன்படுத்தி எனக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

8.3 நாளாந்தம் சேகரிக்கப்படும் பணத்தை உரிய விதத்தில் கணக்கு வைப்பதற்கும், வங்கியிலிடுவதற்கும், அதற்கமைய அறிக்கைகள் இற்றைப்படுத்தப்படுவதாகப் பொறுப்புடன் பார்த்துக் கொள்ளல் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் /நிறைவேற்றுச் செயலாளரின் பொறுப்பாகும்.

8.4 வழங்கப்பட்டுள்ள காரணிகளுக்கமைய முறையான மற்றும் சரியான பொருத்தமான கடனாளிகளைத் தெரிவு செய்தல், உரிய முறையில் கடனை அறவிட்டுக் கொள்ளல், கமநல

அபிவிருத்தி உத்தியோகத்தர்களது, கமநல வங்கிக் கருத்திட்ட உதவியாளர்களின் மற்றும் தேசிய உணவு உற்பத்தி புரட்சிக்கு இணைக்கப்பட்டுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்களது மற்றும் பிரிவிற்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்களது பொறுப்பாகும்.

8.5 இக்கருத்திட்டம் தொடர்பாக மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்களினால் பின்ஆய்வு முறைமையொன்றை நடைமுறைப்படுத்தல் கட்டாயமாகும்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக அவதானத்தைச் சமர்ப்பித்து மகளிர் தொழில் முயற்சியாளர்களின் கருத்திட்டத்தை ஆரம்பிக்கும் பொருட்டு தேவையான வழிகாட்டலை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்/நிறைவேற்றுச் செயலாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி இத்தால் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

**ஒப்பம்:** டபிளியூ.எம்.எம்.பீ. வீரசேகர,
**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.**

**பிரதிகள்:**

01. செயலாளர், விவசாய அமைச்சு - த.அ.பொ.

02. சகல கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்/நிறைவேற்றுச் செயலாளர்கள் - த.அ.பொ.